நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 30, 2016

1. மத்திய அரசிடம் எல்லைப் பாதுகாப்பு பற்றிய அறிக்கையை சமீபத்தில் எந்த குழு சமர்ப்பித்தது ?

A.எச் ஆர் நாகேந்திர குழு
B.என் கே சிங் குழு
C.மதுகர் குப்தா குழு
D.சைலேஷ் நகர் குழு

விடை : C.மதுகர் குப்தா குழு

எல்லைப் பாதுகாப்பு குறித்து மதுகர் குப்தா குழு, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இக்குழு எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்துதல் மற்றும் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் சண்டையில் உள்ள இடைவெளிகள் மற்றும் பலவீன பிரச்சனைக்கு தீர்வு காணுதல் ஆகியவற்றிற்காக உருவாக்கப்பட்டது. இக்குழு அச்சுறுத்தல் குறித்தும், எல்லைப்பாதுகாப்பை வலுப்படுத்துதல் குறித்தும் விரிவான பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

2. எந்த நிபுணர் குழு 'Pellet gun' களுக்கு மாற்று எது என்ற அறிக்கையை சமர்ப்பித்துள்ளது ?

A.பி மேத்தா குழு
B.டி வி எஸ் என் பிரசாத் குழு
C.நீரஜ் குமார் குப்தா குழு
D. டி பி ஷேகத்தார் குழு

விடை: B.டி வி எஸ் என் பிரசாத் குழு

துப்பாக்கிகளில் உருண்டைகளுக்கு(Pellet Guns) மாற்றாக எதனை பயன்படுத்தலாம் என்ற அறிக்கையை T V S N பிரசாத் தலைமையிலான நிபுணர் குழு புது தில்லியில் உள்துறை செயலாளர் ராஜீவ் மெஹ்ரிஷியிடம்சமர்ப்பித்தது. சமீபத்தில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் நடந்த கலவரத்தில் Pellet குண்டுகளை பயன்படுத்தியதில் நிறைய உயிரிழப்பு மற்றும் பெரிய அளவிலான காயங்கள் ஏற்பட்டன. இதை கருத்தில் கொண்டு அதற்கு மாற்றாக எதை பயன்படுத்தலாம் என்று ஆராய்வதற்காக இக்குழு அமைக்கப்பட்டது.

3. 2016 பிரிக்ஸ் சுற்றுலா மாநாடு இந்தியாவின் எந்த மாநிலத்தில் நடைபெறவுள்ளது ?

A.இமாசலப் பிரதேசம்
B.ஆந்திரப் பிரதேசம்
C.உத்தரப் பிரதேசம்
D.மத்தியப் பிரதேசம்

விடை : D. மத்தியப் பிரதேசம்

சுற்றுலா மீதான 2016 பிரிக்ஸ் மாநாடு உள்-பிராந்திய சுற்றுலாவை ஊக்குவிக்க செப்டம்பர் 1 முதல் மத்தியப் பிரதேசம் கஜுராஹோவில் நடைபெற உள்ளது. 2- நாள் நடைபெறும் இந்நிகழ்வு, பலதரப்பட்ட அரசுகளுக்கிடையேயான கருத்துக்கள், யோசனைகள் , குழு விவாதங்கள், தொழில்நுட்பம் ஆகிய கூறுகளை கொண்டுள்ளது. பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே உட்-பிராந்திய சுற்றுலாவை மேம்படுத்த ஒத்துழைப்பு வழங்குவது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

4."KBL-SMARTz" எனப்படும் யு.பி.ஐ அடிப்படையிலான மொபைல் பயன்பாட்டை(மொபைல் ஆப்) பின்வரும் எந்த வங்கி அறிமுகம் செய்துள்ளது ?

A.ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
B.பேங்க் ஆப் பரோடா
C.கர்நாடகா வங்கி
D.விஜயா வங்கி

விடை: C.கர்நாடகா வங்கி

கர்நாடக வங்கி சமீபத்தில் "KBL-SMARTz" எனும் மொபைல் பயன்பாட்டை National Payments Corporation of India (NPCI)-ன் ஒருங்கிணைந்த செலுத்து இடைமுகம் (Unified Payments Interface) அடிப்படையில் அறிமுகம் செய்தது. டிஜிட்டல் பணபரிமாற்ற முறையில் NPCI-ன் ஒரு புதுமுயற்சி இது ஆகும். இதன் மூலம் யு.பி.ஐ உறுப்பினர் வங்கிகளின் வாடிக்கையாளர்கள் வங்கி கணக்கு தகவல்கள் எதுவும் இன்றி தங்கள் ஸ்மார்ட்போனில் இருந்தே பணம் செலுத்த,அனுப்ப மற்றும் சேகரிக்க முடியும்.

5. 2015-ஆம் ஆண்டிற்கான சரஸ்வதி சம்மன் விருது யாருக்கு வழங்கப்பட்டது ?

A.கோவிந்த் மிஸ்ரா
B.பத்ம சச்தேவ்
C.சுகந்த குமாரி
D.ஏ ஏ மணவாளன்

விடை: B.பத்ம சச்தேவ்

நன்கு அறியப்பட்ட ஆசிரியரான, பத்மா சச்தேவ் டோக்ரி மொழியில் தனது சுயசரிதையை 'Chitt-Chete' என்ற பெயரில் எழுதினார். இந்த புத்தகத்திற்காக, 2015-ஆம் ஆண்டின் சரஸ்வதி சம்மன் விருது வழங்கப்பட்டது. புதுதில்லி துணைநிலை ஆளுநர் நஜீப் ஜங் இவரை பாராட்டியுள்ளார். இவ்விருது கடந்த 10 வருடங்களில் வெளியிடப்பட்ட சிறந்த இந்திய மொழி இலக்கியத்திற்காக இந்திய குடிமகனுக்கு வழங்கப்படுகிறது. ஒரு சான்று, ஒரு தகடு தவிர ரூ 15 லட்சம் பரிசுத்தொகை இவ்விருதிற்காக வழங்கப்பட்டுள்ளது.

6.ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) சர்வதேச அணு ஆயுத சோதனை எதிர்ப்பு தினம் எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது ?

A.ஆகஸ்ட் 28
B.ஆகஸ்ட் 29
C.ஆகஸ்ட் 27
D.ஆகஸ்ட் 30

விடை : B.ஆகஸ்ட் 29

ஐக்கிய நாடுகள் சபையானது (ஐ.நா.), அணு ஆயுத சோதனையின் விளைவு பற்றிய பொது விழிப்புணர்வு மற்றும் கல்வி அறிவு புகட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29-ஆம் தேதி சர்வதேச அணு ஆயுத சோதனை எதிர்ப்பு தினத்தினை அனுசரிக்கிறது. இந்நாளின் நோக்கமானது, அணு ஆயுத சோதனையை முடிவுக்கு கொண்டு வருவதும், அமைதி மற்றும் பாதுகாப்பை ஊக்குவிப்பதுவும் ஆகும்.

7.இந்தியாவின் முதல் இராணுவ பாரம்பரிய இணையதளத்தை எந்த அமைப்பு துவங்கியுள்ளது ?

A.Magic Bus India Foundation
B.Glory Foundation
C.Sports Coaching Foundation
D.Subroto Mukerjee Sports Education Society

விடை : B.Glory Foundation

இந்தியாவின் முதல் இராணுவ பாரம்பரிய வலைத்தளம் "coloursofglory.org" சமீபத்தில் குளோரி அறக்கட்டளை மூலம் தொடங்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இந்தியாவின் முக்கிய நகரங்களில் உள்ள மக்களுக்கு , இந்திய நாட்டின் இராணுவ வரலாறு மற்றும் பாரம்பரியம் பற்றிய பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது. இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பெரும்பாலும் கண்காட்சிகள், படங்கள், கருத்தரங்குகள் போன்று நடத்தப்பட இருக்கின்றன.

8. வேளாங்கண்ணி திருவிழா இந்தியாவின் எந்த மாநிலத்தில் தொடங்கியது ?
A.கேரளா
B.ஆந்திரப் பிரதேசம்
C.தமிழ்நாடு
D.தெலுங்கானா

விடை : C.தமிழ்நாடு

உலகப் புகழ்பெற்ற வேளாங்கண்ணி வருடாந்திர விழா தமிழ்நாட்டில் உள்ள நாகப்பட்டினத்தில் ஆகஸ்ட் 29-ஆம் நாள் தொடங்கியது. 10 நாட்கள் நடைபெறும் இந்த நீண்ட திருவிழாவில், லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பாக்கப்படுகிறது. வேளாங்கண்ணி ஆண்டு முழுவதும் மில்லியன் மக்களை கவர்கிறது. சுமார் 550 ஆண்டுகளுக்கு முன்பு, அன்னை வேளாங்கண்ணி கையில் குழந்தை இயேசுவுடன் , நாகப்பட்டினத்திற்கு பால் எடுத்து செல்லும் ஒரு ஏழை,அப்பாவி சிறுவனுக்கு காட்சியளித்தார். அதிலிருந்து, சாதி, சமயம், நிறம், தேசியம் கடந்து பல்வேறு மக்கள் இங்கு பிரார்த்தனை செய்ய வருகை தருகின்றனர்.

9. இந்திய ரிசர்வ் வங்கி (RBI)யின் 2015-16 ஆண்டறிக்கையின்படி, 2017 நிதியாண்டில் (FY 17) -ல் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி(GDP) எவ்வளவு சதவீதம் என்று கணிக்கப்படுகிறது ?

A. 7.8 %
B. 7.9
C. 8.0 %
D. 7.6 %

விடை : D. 7.6 %

இந்திய ரிசர்வ் வங்கி (RBI)யின் வருடாந்திர அறிக்கை 2015-16 படி, நிதியாண்டு 17-ல் (FY 17) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.6% ஆகும். இருப்பினும், சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) மசோதாவானது, கூட்டுறவு நிதி கூட்டாச்சிமுறை மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களில் ஒரு புதிய சகாப்தத்தை குறிக்கும் என்று அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

10. எந்த நாடு 2016-ஆம் ஆண்டிற்கான சார்க் புள்ளியியல் அமைப்புகளின் தலைவர்கள் (Heads of SAARC Statistical Organizations) கூட்டத்தினை நடத்துகிறது ?

A.பூடான்
B.நேபாளம்

C.இந்தியா
D.பாகிஸ்தான்

விடை : C.இந்தியா

2016 சார்க் புள்ளியியல் அமைப்புக்களின் (SAARCSTAT) தலைவர்கள் கூட்டத்தின் 8ஆம் பதிப்பு ஆகஸ்ட் 29 அன்று புது தில்லியில் தொடங்கியது. இந்த கூட்டத்தின் மையக்கருத்து "Trade Statistics - Merchandise & Services" என்பதே ஆகும்.

நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 28,29 -2016

1. பின்வரும் எந்த உயர்மட்டக்குழு கார்டு வழி பணப்பரிமாற்றத்தை (Card Payments) ஊக்குவிக்க, மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ?

A,அமித் மித்ரா குழு
B.சங்கர் ஆச்சார்யா குழு
C.ரத்தன் பி வட்டல் குழு
D.அரவிந்த் சுப்பிரமணியன் குழு

விடை : C.ரத்தன் பி வட்டல் குழு

மத்திய நிதி அமைச்சகம், பண பரிவர்த்தனைகளை கார்டு (Debit / Credit) மூலம் மேற்கொள்வதை ஊக்குவிக்க தேவையான பரிந்துரைகளை வழங்க ஒரு உயர்மட்டகுழுவை அமைத்துள்ளது. வரிச்சலுகைகள், கேஷ் பேக் போன்றவை வழங்குவதின் மூலம் இதை சாத்தியப்படுத்தலாம் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இக்குழுவின் நோக்கமானது, நேரடியாக கையில் இருந்து பணம் செலுத்துவதை குறைப்பதுவேயாகும். இதன் தலைவராக, நிதி அயோக்-கின் சமூக நலத்துறைக்கான முதன்மை ஆலோசகரும், முன்னாள் நிதித்துறை செயலாளருமான ரத்தன் பி வட்டல் நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழு இந்தியாவிலுள்ள பண பரிமாற்று முறைகளை மதிப்பாய்வு செய்யவும் மேலும் அனைத்து பண பரிவர்த்தனைகளையும் அட்டை / டிஜிட்டல் முறையில் உருவாக்குவதற்க்கான சாத்தியக்கூறுகளை ஆராயவும் மற்றும் வணிகர்கள் / நுகர்வோர் டிஜிட்டல் முறையில் உடனடி, குறைந்த செலவில் சிறு கடன் பெற தேவையான வசதிகளை உருவாக்கவும் ஆய்வு செய்யும்.சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க தேவையான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் இது வழங்கும்.

2. சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) 2016-ம் ஆண்டிற்கான பாரம்பரிய ஹீரோஸ் (Heritage Heroes) விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ள முதல் ஆசிய மனிதர் யார் ?

A.ஆண்ட்ரு வில்சன்
B.பிபூதி லஹ்கர்
C.பந்து முகுரா
D.நீல் சங்கா

விடை : B.பிபூதி லஹ்கர்

டாக்டர் பிபூதி லஹ்கர், இந்தியாவைச் சேர்ந்த ஒரு சுற்று சூழல் மற்றும் பாதுகாப்பு ஆர்வலர். சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியத்தின் இவ்விருதிற்கு பரிந்துரைக்கப்படும் முதல் ஆசிய நபர் மற்றும் அசாமின் முதல் தனிப்பட்ட நபர் என்ற பெருமையும் இவரை சேரும். சவாலான சூழ்நிலைகளில் உலக பாரம்பரிய இடங்களை பாதுகாக்கும் வித்தியாசமான முயற்சிகளை செய்வோரை ஊக்குவிக்கும் விதமாக இவ்விருது வழங்கப்பட்டுவருகிறது. டாக்டர் லஹ்கர், கடந்த இரண்டு சகாப்தங்களாக புல்வெளிகள், தாவரங்கள் மற்றும் மனாஸ் தேசியப் பூங்கா பகுதியில் உள்ள விலங்கினங்களை பாதுகாக்கும் பணியை செய்து வருகிறார் மற்றும் தற்போது Aaranyak எனும் அமைப்பின் மனாஸ் நிர்வாகியாகவும் பணியாற்றிவருகிறார் . Aaranyak என்பது வட கிழக்கு இந்தியாவில் பல்லுயிர் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட ஒரு அரசு சாரா நிறுவனம்(NGO) ஆகும். www.iucn.org எனும் வலைத்தளத்தில் ஆன்லைன் மூலம் நடத்தப்பட்ட வாக்குப்பதிவு மூலமாக இவ்விருதுக்கு இவர் தேர்வு செய்யப்பட்டார்.

3. பின்வரும் எந்த இந்திய ஆட்டோமொபைல் நிறுவனம், வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களை கண்காணிக்க "DiGiSENSE platform" எனப்படும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளது ?

A.பஜாஜ் ஆட்டோ
B.மஹிந்திரா அண்ட் மஹிந்திரா
C.டாடா மோட்டார்ஸ்
D.அசோக் லேலண்ட்

விடை : B.மஹிந்திரா அண்ட் மஹிந்திரா

மஹிந்திரா அண்ட் மஹிந்திரா (எம் & எம்) "DiGiSENSE 1.0" எனப்படும் ஒரு புதிய டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளது, இதன் மூலம் வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களின் இருப்பிடத்தை துல்லியமாக எந்நேரத்திலும் அறிய இயலும். புதிய டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் கப்பற்படை ஆபரேட்டர்கள், டிரைவர்கள், விநியோகஸ்தர் மற்றும் சேவை வழங்குபவர் போன்றோர் அவர்களின் வாகனங்கள், லாரிகள், டிராக்டர்கள் அல்லது கட்டுமான உபகரணங்கள் பற்றி முக்கிய தகவல்களை உண்மையான நேர அடிப்படையில் அறிந்து கொள்ள முடியும். இப்புதிய தளம் வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனங்களின் செயல்திறன் மற்றும் இடம் பற்றிய அறிவினை உருவாக்க உதவும்.

இதன் மூலம் மஹிந்திரா நிறுவனம் இந்தியாவின் முதல் அசல் உபகரண உற்பத்தியாளர் (OEM) என்ற பெருமையை அடைந்து இருக்கிறது.

4. "Subroto Cup " எந்த விளையாட்டுடன் தொடர்புடையது ?

A.கிரிக்கெட்
B.கால்பந்து
C.ஹாக்கி
D.பூப்பந்து

விடை : B.கால்பந்து

இந்தியாவில் பள்ளிகளுக்கிடையே நடத்தப்படும் பிரபலமான கால்பந்து போட்டிகளில் ஒன்று Subroto கோப்பை ஆகும். இப்போட்டி Subroto முகர்ஜி விளையாட்டு கல்வி அமைப்பு (SMSES) மூலம் நடத்தப்படுகிறது. சமீபத்தில் இவ்வமைப்பு, தேசிய விளையாட்டு விருதான 'Rashtriya Khel Protsahan Puruskar-2016' எனும் விருதினை பெற்றது. Subroto கோப்பையை இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் ஆதரவுடன், இந்திய விமானப்படை ஒவ்வொரு ஆண்டும் நடத்துகிறது.

5.ஆப்பிரிக்க வளர்ச்சி குறித்த 2016 டோக்கியோ சர்வதேச மாநாடு (TICAD) எந்த நாட்டில் நடைபெற்றது ?

A.சாம்பியா
B.மொரோக்கோ
C.கென்யா
D.தென் ஆப்ரிக்கா

விடை : C.கென்யா

ஆப்பிரிக்க வளர்ச்சி குறித்த 2016 டோக்கியோ சர்வதேச மாநாட்டின் (TICAD) 6ம் பதிப்பு ஆகஸ்ட் 27-28, 2016 அன்று கென்யாவில் உள்ள நைரோபியில் நடைபெற்றது. ஆப்பிரிக்காவில் நடைபெறும் முதல் மாநாடு இதுவாகும். உச்சிமாநாட்டின் முக்கிய கருப்பொருள்களாவன: வாழ்க்கை தரத்தை பொருளாதார பன்முகத்தன்மை மற்றும் தொழிற்புரட்சி கட்டமைப்பு மூலம் ஊக்குவித்தல், சமூக ஸ்திரத்தன்மை மற்றும் தரமான வாழ்வை வழங்கும்பொருட்டு சுகாதார அமைப்பினை மேம்படுத்துதல் ஆகும்

6. 2016 பெல்ஜியம் ஃபார்முலா ஒன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வென்றவர் யார் ?

A.செபாஸ்டியன் வெட்டல்

B.டேனியல் ரிச்சியர்டோ
C.லூயிஸ் ஹாமில்டன்
D.நிகோ ரோஸ்பெர்க்

விடை : D.நிகோ ரோஸ்பெர்க்

நிகோ ரோஸ்பெர்க், ஜெர்மனியின் ஃபார்முலா ஒன் மெர்சிடிஸ் ஓட்டுநர். பெல்ஜியத்தில் உள்ள ஸ்டீவ்லாட் பகுதியில் சர்கியூட் டி ஸ்பா-Francorchamps-ல் நடைபெற்ற 2016 பெல்ஜிய ஃபார்முலா ஒன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் இவர் வெற்றி பெற்றார்.

7. இந்தியாவில் தேசிய விளையாட்டு தினம் எந்த நாளில் கொண்டாடப்படுகின்றது ?

A.ஆகஸ்ட் 28
B.ஆகஸ்ட் 29
C.ஆகஸ்ட் 27
D.ஆகஸ்ட் 26

விடை : B.ஆகஸ்ட் 29

தேசிய விளையாட்டு தினம், ஹாக்கி வீரர் தியான் சந்த் அவர்களின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29-ம் நாள் கொண்டப்படுகிறது. இவர் இந்தியாவிற்காக, 1928,1932 மற்றும் 1936 ஆகிய ஆண்டுகளில் தங்கப் பதக்கங்களை வென்றார்.

8. இந்தியாவின் முதல் ஜவுளி பல்கலைக்கழகம் எந்த மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளது ?

A.மத்தியப் பிரதேசம்
B.அசாம்
C.குஜராத்
D.ஒடிசா

விடை : C.குஜராத்

இந்தியாவின் முதல் ஜவுளி பல்கலைக்கழகம் குஜராத்தின் சூரத் பகுதியில் அமைக்கப்பட உள்ளது , இது குஜராத் மற்றும் இந்தியாவில் ஜவுளிதொழில் செய்ய ஒரு முழுமையான சூழலை உருவாக்கும். இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம் தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R & D) ,திறமையான மனித ஆற்றல் மற்றும் இன்ன பிறவற்றையும் வழங்குவதே ஆகும். மாநில அரசு

பல்கலைக்கழகத்துக்கு ரூ 800-900 கோடி நிதி வழங்குகிறது. அடுத்த ஒன்றரை ஆண்டுகலில் இப்பல்கலைக்கழகம் செயல்பட துவங்கி விடும்.

9. சமீபத்தில் மறைந்த தினாநாத் பேத்தி , எந்த துறையுடன் தொடர்புடையவர் ?

A.கலை
B.விளையாட்டு
C.புகைப்படம்
D.கடல் அறிவியல்

விடை : A.கலை

டாக்டர் தினாநாத் பேத்தி (74), குறிப்பிடத்தக்க ஓவியர், எழுத்தாளர் மற்றும் கலை வரலாற்றாசிரியர். சமீபத்தில் புவனேஸ்வரில் காலமானார். ஒடிசா கலை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான இவர், தன்னுடைய கலை வேலை, கவிதை மற்றும் கற்பித்தல் மூலம் தன்னுடைய வாழ்க்கையை ஒடிசா கலை இயக்கத்திற்காக அர்ப்பணித்தார். ஒடிசா, கிளாசிக்கல், பாரம்பரிய, பழங்குடி, நாட்டுப்புற, கிராமப்புற மற்றும் சமகால கலை குறித்து சுமார் 60-க்கும் மேற்பட்டநூல்களை ஒடியா, ஆங்கிலம் மற்றும் ஜெர்மன் மொழிகளில் எழுதியுள்ளார். அவைகளில் சில Sayonara, Punarnava, Chilika Panire Chhai, Digapandhi Ra Drawing Master முதலியனவாகும்.

10. ஸ்கார்ப்பின் நீர்மூழ்கிக் கப்பலின் ரகசியங்கள் கசிந்தது குறித்து ஆராய, இந்திய கடற்படை யாருடைய தலைமையில் உயர் மட்ட குழு ஒன்றை அமைத்துள்ளது ?

A.ராபின் தோவான் குழு
B.அசோக் குமார் குழு
C.கிரிஷ் லுதர்
D.சுனில் லன்பா குழு

விடை : B.அசோக் குமார் குழு

இந்திய கடற்படை, ஸ்கார்ப்பின் நீர்மூழ்கிக் கப்பலின் ரகசியங்கள் எந்த அளவிற்கு கசிந்தது, அதனால் ஏற்படும் சேதம் என்ன என்பது குறித்து ஆராய உயர் மட்ட குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழு, துணை தலைமை கடற்படை அட்மிரல் அசோக் குமார் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், எவ்வாறான தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என இந்திய கடற்படை முடிவெடுக்கும்.

நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 26,27 -2016

1. 2016 ஆண்டிற்கான ஐரோப்பாவின் சிறந்த UEFA- வீரர் விருது யாருக்கு அளிக்கப்பட்டது ?

A.கிறிஸ்டியானோ ரொனால்டோ
B.லியோனல் மெஸ்ஸி
C.அந்தோனியோ கிரீஷ்மேன்
D.கரேத் பேல்

விடை: A. கிறிஸ்டியானோ ரொனால்டோ

கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஸ்பானிஸ்ய கிளப்பின் ரியல் மாட்ரிட் மற்றும் போர்ச்சுக்கல்லின் தேசிய அணிக்காக விளையாடும் போர்த்துகீசிய கால்பந்து வீரர். 2016 ஆண்டிற்கான ஐரோப்பாவின் சிறந்த UEFA- வீரர் விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதினை இவர் 2 வது முறையாக பெறுகிறார். முன்னதாக 2014-ல் இந்த விருதினைப் பெற்றார். இவர் 2015-ம் ஆண்டில், ரியல் மாட்ரிட் அணிக்காக 35 கோல்கள் மற்றும் சாம்பியன்ஸ் லீக் போட்டியில் 16 கோல்களை அடித்தார். இவர் யூரோ 2016 போட்டியில் போர்ச்சுகல் தேசிய அணிக்காக 3 கோல்கள் அடித்தார்.

2. குழந்தைகளை பாலியல் தொல்லைகளில் இருந்து பாதுகாக்க "POCSO e-box" என்ற சேவையை பின்வரும் எந்த மத்திய அமைச்சகம் துவங்கியுள்ளது ?

A.மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை
B.பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை
C.உள்நாட்டலுவல்கள்
D.சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

விடை: B.பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை

[POCSO -Protection of Children from Sexual Offenses]. மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மேனகா சஞ்சய் காந்தி, சமீபத்தில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் இருந்து அவர்களை பாதுகாக்க POCSO எனப்படும் இணையவழி புகார் பெட்டிகளை புதுடெல்லியில் அறிமுகம் செய்து வைத்தார். இத்தகைய இணைய புகார் மேலாண்மை அமைப்பு மூலம் சரியான நேரத்தில் குற்றவாளிகள் குறித்து தகவல் அளிக்க முடியும் மேலும் 2012 POCSO சட்டத்தின் கீழ் குற்றவாளிகளுக்கு எளிதில் தண்டனை பெற்றுத்தர இயலும். தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் முயற்சியால் இது துவங்கப்பட்டுள்ளது.

3. 2016 அன்னை தெரேசா சர்வதேச திரைப்பட விழா (MTIFF) பின்வரும் எந்த நகரத்தில் தொடங்கியது ?

A.கொல்கத்தா
B.சென்னை
C.பெங்களூரு
D.கொச்சி

விடை : A.கொல்கத்தா

அன்னை தெரேசா சர்வதேச திரைப்பட விழா (MTIFF) வின் 4வது பாதிப்பு ஆகஸ்ட் 26,2016-ல் மேற்கு வங்கத்தில் துவங்கியது. அரசு நடத்தும் நந்தன் மல்டிப்ளெக்ஸ்ஷில் இந்த 4 நாள் திரைப்பட திருவிழா நடைபெற உள்ளது. இதில் தெரேசா பற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட 23 சிறந்த வெளிநாட்டு மற்றும் இந்திய படங்கள் திரையிடப்பட உள்ளது. இது கொல்கத்தா உயர்மறை அறக்கட்டளை மற்றும் SIGNIS இந்தியா (Indian chapter of World Catholic Association for Communication) ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது. 45 ஆண்டுகளாக கொல்கத்தா தெருக்களில் வறுமை மற்றும் நோய்வாய்ப்பட்ட ஏழைகளுக்காக பணியாற்றிய பின்னர், 1997 ஆம் ஆண்டு அன்னை தெரேசா காலமானார். ரோமன் கத்தோலிக்க கன்னியாஸ்திரியான அன்னை தெரேசாவை ஒரு துறவி என்று 2016 செப்டம்பரில் வத்திக்கான் நகரில் திருத்தந்தை பிரான்சிஸ் பிரகடனம் செய்ய உள்ளார்.

4. 2016 சார்க் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் இந்திய பிரதிநிதிக் குழுவிற்கு தலைமை வகித்தவர் யார் ?

A.சுஷ்மா சுவராஜ்
B.சசிகாந்த தாஸ்
C.அமித் மித்ரா
D.அருண் ஜேட்லி

விடை : B.சசிகாந்த தாஸ்

சசிகாந்த தாஸ், ஒரு பொருளாதார விவகார மந்திரி. பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் ஆகஸ்ட்25-26-இல் நடைபெற்ற 2016-ம் ஆண்டிற்கான சார்க் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் இந்தியா சார்பாக இவர் கலந்து கொண்டார். (SAARC- South Asian Association for Regional Cooperation)

5. ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமியபகுதிகளின் (ISIS) ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர "Operation Euphrates Shield" எனும் ராணுவ நடவடிக்கையினை சிரியாவில் அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது ?

A.ஜோர்டன்
B.இஸ்ரேல்
C.துருக்கி
D.லெபனான்

விடை : C.துருக்கி

துருக்கியின் எல்லையில் அமைந்துள்ள ஜெராபிள்ஸ் என்ற நகரத்தை ஈராக் மற்றும் சிரிய (ISIS) இஸ்லாமிய அரசின் பிடியில் இருந்து விடுவிக்கும் பொருட்டு துருக்கி அரசு "Operation Euphrates Shield" என்ற ராணுவ நடவடிக்கையை எடுத்துள்ளது. 2011-ல் ஏற்பட்ட சிரிய நெருக்கடிக்குப் பிறகு, சிரியாவின் பகுதியில் துருக்கி தலையீடு செய்வது இதுவே முதல் முறையாகும்.

6. துராந்த் கோப்பை எந்த விளையாட்டுகளுடன் தொடர்புடையது ?

A.கால்பந்து
B.கிரிக்கெட்
C.கூடைப்பந்து
D.ஹாக்கி

விடை : A.கால்பந்து

துராந்த் கால்பந்து கோப்பை போட்டியின் 128வது பதிப்பு ஆகஸ்ட் 28, 2016ல் இருந்து செப்டம்பர் 11, 2016 வரை நடைபெற உள்ளது. தற்போதைய பதிப்பில், அனைத்திந்திய கால்பந்துக் கூட்டமைப்பு இந்திய லீக்கில் இருந்து 8 அணிகளும், 4 சர்விஸ் அணிகளும் பங்கேற்கின்றன. வெற்றிபெறும் அணிக்கு ரூ 45 லட்சமும் , தோற்ற அணிக்கு ரூ 20 லட்சமும் , அரை இறுதிக்கு நுழையும் ஒவ்வொரு அணிக்கும் தலா ரூ .5 லட்சமும் ரொக்கப் பரிசுகளாக வழங்கப்பட உள்ளது. துராந்த் கோப்பை இந்தியாவின் ஒரு மதிப்புமிக்க கால்பந்து போட்டி மற்றும் ஆசியாவின் மிகப்பழமையான போட்டி ஆகும். இங்கிலாந்து கால்பந்து கூட்டமைப்பு கோப்பை மற்றும் ஸ்காட்லாந்து கால்பந்து சங்க கோப்பைக்குப் பிறகு உலகின் 3வது பழமையான போட்டி இதுவே .

7. 2016 உலக இடர் குறியீட்டு (World Risk Index)வரிசையில் இந்தியாவின் தரம் என்ன ?

A.77வது
B.83வது
C.67வது
D.56வது

விடை : A.77வது

2016 உலக இடர் குறியீட்டு பட்டியலில் மொத்தமுள்ள 171 நாடுகளில் இந்தியாவின் தரம் 77 ஆகும். இந்த அறிக்கையை ஜெர்மனியின் ஸ்டட்கர்ட் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் சுற்றுச்சூழல் மற்றும் மனித பாதுகாப்பிற்கான ஐ.நா வின் பல்கலைக்கழகமும், Bündnis Entwicklung Hilft நிறுவனமும் சமீபத்தில் வெளியிட்டது. 171 நாடுகளில் ஏற்படும் இயற்கை இடையூறுகள் மற்றும் சமுதாய பாதிப்புகளை கருத்தில்கொண்டு பேரழிவு ஆபத்தானது மதிப்பீடு செய்யப்பட்டது.

8. 2017 பிரவேசி பாரதிய திவாஸ் (Pravasi Bharatiya Divas)-ன் மையக் கருத்து என்ன ?

A.Engaging Diaspora - The Indian Growth Story

B.Redefined Engagement With Indian Diaspora

C. Apna Bharat Apna Gaurav: Connecting Across Generations

D.Connecting for a Shared Future: The Indian Diaspora, India and the Pacific

விடை : B.Redefined Engagement With Indian Diaspora

2017-ம் ஆண்டிற்கான பிரவேசி பாரதிய திவாஸ்-யின் 15வது பாதிப்பினை கர்நாடக மாநிலம் ஜனவரி 7-ல் இருந்து தொடர்ந்து 3 நாட்களுக்கு நடத்துகிறது. 1915-ஆம் ஆண்டு ஜனவரி 9-ம் தேதி மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பினார் மேலும் வெளிநாடுகளில் இருக்கும் இந்திய சமூகத்தின் பங்களிப்பை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 9-ம் நாள் PBS நாளாக கொண்டாப்பட்டு வருகிறது

9. உலகின் முதல் சுய ஓட்டுநர் டாக்ஸி (self-driving taxi) சேவையை ஆரம்பித்துள்ள நாடு எது ?

A.ஜப்பான்
B.சிங்கப்பூர்
C.மலேஷியா
D.சீனா

விடை : B.சிங்கப்பூர்

உலகின் முதல் சுய ஓட்டுநர் டாக்ஸி சேவையை சிங்கப்பூர் சார்ந்த nuTonomy எனப்படும் தன்னாட்சி வாகன சாஃப்ட்வேர் நிறுவனம் துவங்கியுள்ளது. 6 சிறிய கார்களை கொண்டு இந்நிறுவனம் தன் சேவையை தொடங்கியது. சோதனை ஓட்டத்தின் பொழுது , மாற்றியமைக்கப்பட்ட ரெனால்ட் ஜோ மற்றும் மிட்சுபிஷிவின் i

-MiEV Electrics கார்களின் முன்புறத்தில் ஒரு ஓட்டுனரும் (சக்கரத்தை பின்னிழுக்க), கார்களின் கணினிகளை கண்காணிக்க பின்பக்கம் ஒரு ஆராய்ச்சியாளரும் இருந்தனர் . ஒவ்வொரு காரிலும் 6 LiDAR இணைகள் பொருத்தப்பட்டுள்ளன. (LiDAR - ரேடார் போன்று செயல்படக்கூடிய லேசர்கள்). தொடர்ந்து சுழல்கிற LiDAR ஒன்று கூரை மீது பொருத்தப்பட்டுள்ளது. தடைகளை ஸ்கேன் செய்ய மற்றும் போக்குவரத்து விளக்கின் மாற்றங்களை கண்டறிய டேஷ்போர்டில் இரண்டு கேமராக்கள் உள்ளன.

10. பிராந்திய ஒத்துழைப்புக்கான 19வது தெற்காசிய (சார்க்) உச்சி மாநாடு 2016 எந்த நாட்டில் நடைபெற்றவுள்ளது ?

A.மாலத்தீவு
B.பாகிஸ்தான்
C.வங்காளம்
D. பூடான்

விடை : B.பாகிஸ்தான்

19வது சார்க் மாநாடு நவம்பர் 9 மற்றும் 10 தேதியில் பாகிஸ்தானில் உள்ள இசுலாமாபாத்தில் நடைபெற உள்ளது . சார்க் உறுப்பு நாடுகள் மற்றும் 9 பார்வையாளர் நாடுகளின் தலைவர்கள் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்வார்கள். உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்த, பாகிஸ்தான் அரசாங்கம் ஒரு "சார்க் மாநாட்டு குழுவை" சமீபத்தில் அமைத்துள்ளது. சார்க் மாநாட்டில் பங்குதாரர்கள் நெருக்கமாக இணங்கி பணிபுரிய உதவும் வகையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக பாகிஸ்தானின் மூத்த தூதர் அம்ஜத் சியால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பாகிஸ்தானுக்கான அடுத்த சார்க் வேட்பாளர் ஆவார்.

நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 25, 2016

1. சமீபத்தில் மறைந்த, கே கே ஸ்ரீதரன் நாயர் எந்த துறையுடன் தொடர்புடையவர் ?

A. விளையாட்டு
B.அரசியல்
C.இதழியல்
D.அறிவியல்

விடை : C.இதழியல்

கே கே ஸ்ரீதரன் நாயர் (86), மாத்ருபூமி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர், சமீபத்தில் கேரள மாநிலம், கொச்சினில் காலமானார். கேரளாவின் கோழிக்கோட்டில் மாத்ருபூமி பிரிண்டிங் மற்றும் பப்ளிஷிங் நிறுவனத்தால் இந்த வார பத்திரிக்கை பிரசுரிக்கப்படுகிறது.

2.சமீபத்தில் மறைந்த, டாக்டர் ஏ.ஆர்.கித்வாய் எந்த துறையுடன் தொடர்புடையவர் ?

A.அரசியல்
B.இதழியல்
C.புகைப்படம்
D.ஓவியம்

விடை : A.அரசியல்

டாக்டர். அக்லாக் ரகுமான் கித்வாய் (96), ஒரு சுதந்திர போராட்ட வீரர், புகழ்பெற்ற பாராளுமன்ற நிர்வாகி, சமீபத்தில் காலமானார். இவர் பீகார், மேற்கு வங்கம், அரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் முன்னாள் ஆளுநர் ஆவார். மேலும் பத்ம விபூஷன் விருதும் பெற்றுள்ளார்.

3. "பிரிக்ஸ்-ன் சர்வதேச மத்தியஸ்தம்: சவால்கள், வாய்ப்புகள் மற்றும் முன்னுள்ள சாலை" மாநாடு இந்தியாவின் எந்த நகரத்தில் நடைபெற உள்ளது ?

A.புது தில்லி
B.மும்பை
C.ஜெய்ப்பூர்
D.அகமதாபாத்

விடை: A.புது தில்லி

"பிரிக்ஸ்-ன் சர்வதேச மத்தியஸ்தம்: சவால்கள், வாய்ப்புகள் மற்றும் முன்னுள்ள சாலை" மாநாடு புது தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் ஆகஸ்ட் 27, 2016 அன்று நடைபெற இருக்கிறது. இது பொருளாதார விவகாரங்கள் துறை அமைச்சகம், நிதித்துறை அமைச்சகம், காமர்ஸ் & இன்டஸ்ட்ரி (FICCI), மத்தியஸ்த இந்திய கவுன்சில் (ICA) ஆகிய துறைகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தகராறு தீர்மான முறைகளை மதிப்பீடு செய்தல், விவாதித்தல், கருத்துகளை பகிர்தல், நுண்ணறிவின் மூலம் ஆராய்தல் போன்றவை இம்மாநாட்டின் நோக்கம்.

4. தென் இந்தியாவின் முதல் குழந்தைகள் நீதிமன்றம் பின்வரும் எந்த நகரத்தில் தொடங்கப்பட்டுள்ளது ?

A.கொச்சி
B.ஹைதராபாத்
C.விசாகப்பட்டினம்
D.சென்னை

விடை : B.ஹைதராபாத்

தென் இந்தியாவின் முதல் குழந்தைகள் நீதிமன்றம் மற்றும் இந்தியாவில் 6வது குழந்தைகள் நீதிமன்றம் இது. குழந்தைகள் தொடர்பான வழக்குகளை வேகமாக தீர்க்க ஹைதராபாத்தில் உள்ள நம்பல்லி குற்றவியல் நீதிமன்ற வளாகத்தில் தொடங்கப்பட்டது. இந்த நீதிமன்றம் , குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் (போஸ்கோ) தடுப்புச்சட்டம் - 2012 ல் கீழ் துவங்கபட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் , குழந்தைகள் காத்திருக்க தனி அறைகள் மற்றும் குற்றவாளியை விசாரிக்க வீடியோ கேமரா விசாரணை போன்ற அம்சங்கள் உள்ளன .

5. பின்வரும் எந்த அண்டை நாட்டு மக்கள் கேட்பதற்கு வசதியாக 'ஆகாசவாணி மைத்ரி' என்ற புதிய ரேடியோ சேனலை இந்திய அரசு துவங்கி உள்ளது ?

A.நேபாளம்
B.வங்காள தேசம்
C.பூட்டான்
D.மியான்மர்

விடை : B.வங்காள தேசம்

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி சமீபத்தில் பெங்காலி கேட்பவர்களுக்காக, கொல்கத்தா ராஜ்பவன், மேற்கு வங்கத்தில் "ஆகாசவானி மைத்ரி" என்ற சேனலை துவங்கி வைத்தார். அனைத்திந்திய ரேடியோவின்(AIR) புது முயற்சி இது. இந்தியா மற்றும் வங்காளம் இடையே, கலாச்சாரம் , பொருளாதாரம் , அரசியல் மற்றும் உணர்ச்சி பிணைப்பு உறவுகளை வலுப்படுத்துவதை இலக்காக இது கொண்டுள்ளது. இரு நாடுகளும் பெங்காலி கலாச்சாரத்தை பாதுகாக்கும் ஒரு பொதுவான மேடையில் இருக்கிறது. புதிய உயர் சக்தி 1000Kw டிஆர்எம் டிரான்ஸ்மிட்டர் கொண்டு, நடுத்தர அலை மூலம் வங்காளம் முழுவதும் ஒலிபரப்பு செய்யப்படுகிறது மற்றும் வலைத்தளம் மற்றும் மொபைல் செயலியிலும் உலகளவில் இதனை கேட்க முடியும்.

6. ரியோ 2016 துப்பாக்கி சுடுதல் தோல்வி குறித்து ஆராய அமைக்கப்பட்ட இந்தியா தேசிய குழுவின் துப்பாக்கி சங்க (NRAI) தலைவராக நியமிக்கப்பட்டிருப்பவர் யார் ?

A.ஜீத்து ராய்

B. கனக் நராங்
C.ராஜ்யவர்தன் சிங் ரத்தோர்
D.அபினவ் பிந்த்ரா

விடை: D.அபினவ் பிந்த்ரா

அபினவ் பிந்த்ரா, ரியோ 2016 துப்பாக்கி சுடுதல் தோல்வி குறித்து ஆராய அமைக்கப்பட்ட இந்தியா தேசிய குழுவின் துப்பாக்கி சங்க (NRAI) தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இக்குழுவின் உறுப்பினராக இவர் இருப்பதால் இவரை கேள்வி கேட்பதில் இருந்து தன்னை விடுவித்து கொண்டுள்ளார். துப்பாக்கி சுடுதலில் எந்த பதக்கமும் வெல்லாததற்கான காரணங்களை அறியவும், எதிர்காலத்தில் என்ன மாற்றங்களை செய்ய வேண்டும் , எதனை எல்லாம் மாற்றி கொள்ள வேண்டும் என்பன போன்ற அறிவுரைகளையும் இக்குழு வழங்க உள்ளது.

7. இந்தியாவின் 2016 சர்வதேச திரைப்பட விழாவில் , எந்த நாட்டின் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது ?

A.ஈரான்
B.தென் கொரியா
C.பிரேசில்
D.ஸ்பெயின்

விடை : B.தென் கொரியா

நவம்பர் 2016 அன்று கோவாவில் நடைபெறும் 47-வது இந்திய சர்வதேச திரைப்பட விழா (IFFI) 2016-ல் தென் கொரியாவின் மீது அனைவரது கவனமும் திருப்பியுள்ளது. இதற்கு காரணம் , தென் கொரியாவின் திரைப்படங்கள் திரையிடப்படுவதும், நன்கு அறியப்பட்ட திரைப்பட நடிகர்கள் விழாவில் பங்கு பெறுவதே ஆகும்.

8. புத்தகம் "கில்லிங் இண்டிமேட் வரலாறு: இருபதாம் நூற்றாண்டில் நேருக்கு நேர் போர்க்கொலை செய்தல் " யாரால் எழுதப்பட்டுள்ளது ?

A. பிகு பரேக்
B. ஜோனா பார்கே
C. பெனில் செரிடிவாலா
D. கீர்த்தி ரம்பட்லா

விடை : B. ஜோனா பார்கே

கில்லிங் இண்டிமேட் வரலாறு: இருபதாம் நூற்றாண்டில் நேருக்கு நேர் போர்க்கொலை செய்தல் " என்ற புத்தகத்தை ஜோனா பார்கே எழுதியுள்ளார். இது ஒரு எளிய உண்மையை வெளிப்படுத்துகிறது: ஆண்கள் மற்றும் பெண்கள் அதிகாரப்பூர்வமாக கொல்லப்படுவதை சந்தோஷமாக பெறுகின்றனர்.

9. பொறியியல் துறையில் சிறந்து விளங்கியமைக்காக , IEI-IEEE-2015 பரிசு வென்ற முதல் நபர் யார் ?

A. ஏ எஸ் கிரண் குமார்
B. ஜி சதீஷ் ரெட்டி
C .கே கே ராதாகிருஷ்ணன்
D. அவினாஷ் சந்தர்

விடை : B. ஜி சதீஷ் ரெட்டி

டாக்டர் ஜி சதீஷ் ரெட்டி, பாதுகாப்பு அமைச்சரின் விஞ்ஞான ஆலோசகர் மற்றும் DRDO வின் டி.ஜி. (ஏவுகணைகள் மற்றும் போர்தந்திர அமைப்புகள்). ஏவுகணைகள் மற்றும் விண்வெளி தொழில்நுட்பங்களில் இவரது கணிசமான தேசிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்பட்டு உள்ளது.

10. டாக்டர் சலீம் அலி பறவைகள் சரணாலயம் இந்தியாவின் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது ?

A. கோவா
B.ஒடிசா
C.திரிபுரா
D.மணிப்பூர்

விடை : A. கோவா

டாக்டர் சலீம் அலி பறவைகள் சரணாலயம் கோவாவின் சோரோ தீவுவின் மேற்கு முனையில் மண்டோவி நதியுடன் சேர்ந்து அமைந்துள்ளது. முகத்துவார சதுப்புநில வாழ்விடத்தில் அமைத்துள்ள இவ்விடம் பிரபல பறவை ஆய்வாளர் சலிம் அலி நினைவாக அவர் பெயரால் அழைக்கப்படுகிறது. இச்சரணாலயத்தில் சிறிய முள்ளம்பன்றியும், கருப்பு முள்ளம்பன்றியும், சிவப்பு முடிச்சு, பலா கத்தரி, பல வண்ணங்களால் ஆன கொக்கு , மேற்கு பாறைகள் கொக்கு முதலியன திரளாக உள்ளது

நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 24, 2016

1. பின்வரும் எந்த இந்திய மாநிலம் முதன் முதலாக, பயன்பாட்டில் இல்லாத 10 பிராந்திய விமான நிலையங்களை மேம்படுத்த மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது ?

A.மத்தியப் பிரதேசம்
B.ராஜஸ்தான்
C.மகாராஷ்டிரா
D.ஆந்திரப் பிரதேசம்

விடை : C.மகாராஷ்டிரா.

மகாராஷ்டிரா மாநிலம் பயன்பாட்டில் இல்லாத 10 பிராந்திய விமான நிலையங்களை மேம்படுத்த மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள முதல் இந்திய மாநிலம் ஆகும். இதற்கு பிராந்திய இணைப்பு திட்டம் (RCS) முழு மானியம் வழங்குகிறது. இதன முக்கிய நோக்கமானது, அனைவரும் இச்சேவையை பயன்படுத்தும் வகையில் மலிவு விலையில் டிக்கெட் விற்பனை செய்வதே ஆகும். தேசிய விமானப் போக்குவரத்துக் கொள்கையின் ஒரு பகுதியாக, RCS யை சேர்க்க மத்திய அமைச்சரவை ஜூன் 2016-ல் ஒப்புத்தல் வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட உள்ள விமான நிலையங்களாவன: கோலாப்பூர், ஷீரடி, அமராவதி, ஒடிசா, நாசிக், ஜல்கான், நான்டெட், சோலாப்பூர், ரத்னகிரி மற்றும் சிந்துதுர்க். மாநில அரசு நம்பகத்தன்மை இடைவெளி நிதியாக 20% செலவை வழங்கும் மீதமுள்ள செலவை மத்திய அரசு ஏற்கும். இந்த விமான நிலையங்களில் சாலைகள், ரயில், மெட்ரோ மற்றும் நீர்வழி இணைப்பு வழங்கப்படும்.

2.இந்தியா சமீபத்தில் பின்வரும் எந்த நாட்டுடன், தொழில் சார்ந்த பயிற்சிக்ககாக ஒப்பந்தம் செய்துள்ளது ?

A.ஜெர்மனி
B.பிரான்ஸ்
C.ரஷ்யா
D.அமெரிக்கா

விடை : A.ஜெர்மனி

இந்தியா சமீபத்தில், தொழில் பயிற்சிக்காக ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் குறிக்கோளானது, இந்தியாவின் தொழிலக குழுமங்களின் பணியிடை சார்ந்த தொழில் பயிற்சிகளை மேம்படுத்தும் சூழ்நிலைகளை உருவாக்குவதே ஆகும். ஒப்பந்தப்படி,ஜெர்மன் தொழில்நுட்ப உதவியானது , இந்திய மற்றும் ஜெர்மன் தொழில் நிறுவனங்கள் இடையே பங்காளித்துவத்தை அதிகரிக்கவும், புதிய பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கவும், நிறுவனங்களின் தொழில் பிணைப்பை அதிகரிக்கவும் உதவும். இது ஜெர்மனியின் இரட்டை முறை கூறுகளை இந்திய நிறுவனத்தில் புகுத்த வழிவகை செய்கிறது.

3. சமீபத்தில் மறைந்த எஸ்.ஆர். நாதன், எந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஆவார் ?

A.தாய்லாந்து
B.சிங்கப்பூர்
C.மலேஷியா
D.மாலத்தீவுகள்

விடை: B.சிங்கப்பூர்

முன்னாள் சிங்கப்பூர் ஜனாதிபதி எஸ் ஆர் நாதன் (92) சமீபத்தில் சிங்கப்பூரில் காலமானார். அவர் சிங்கப்பூரின் 6 வது மற்றும் நீண்ட சேவை செய்த ஜனாதிபதி ஆவார். 1999 முதல் 2011 வரை இவர் இருமுறை இப்பதவி வகித்தார்.

4. "யாங்ஜின் (Yongzin)" எனப்படும் திபெத்திய மொழி தேடுபொறி எந்த நாட்டினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது ?

A.ஜப்பான்
B.சீனா
C.சிங்கப்பூர்
D.தாய்லாந்து

விடை : B.சீனா

சீனா சமீபத்தில் 'Yongzin' எனப்படும், அதன் முதல் திபெத்திய மொழி தேடல் பொறியை அறிமுகம் செய்துள்ளது. திபெத்திய மொழியில், Yongzin என்றால் "மாஸ்டர்" அல்லது "ஆசிரியர்" என்று பொருள். இத்தேடுபொறி, சீனாவில் உள்ள அனைத்து முக்கிய திபெத்திய மொழி வலைத்தளங்களுக்கும் ஒரு பொதுவான தேடுபொறியாக விளங்க உள்ளது. இது செய்தி, வலைத்தளங்கள், படங்கள், வீடியோக்கள், இசை, கலைக்களஞ்சியம், இலக்கியம் மற்றும் மன்றங்கள் என 8 பிரிவுகளில் உள்ளன.

5. லலிதா பாபர் எந்த விளையாட்டுகளுடன் தொடர்புடையவர் ?

A.குத்துச்சண்டை
B.ஸ்பிரிண்ட்
C.மல்யுத்த செய்தல்
D.நீச்சல்

விடை : B.ஸ்பிரிண்ட்

சமீபத்தில், மகாராஷ்டிர அரசு தடைதாண்டும் தடகள வீராங்கனை லலிதா பாபருக்கு அரசு வேலை வழங்க முன்வந்தது. 32 வருடங்களுக்கு பிறகு ஒலிம்பிக்கில் பி டி உஷாவிற்கு அடுத்து தடகள போட்டியில் இறுதிப்போட்டி வரை சென்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. மகாராஷ்டிராவின் சதாரா மாவட்டத்தில் இருந்து வந்தவரான இவர், 2016 ரியோ ஒலிம்பிக்கில் பெண்களுக்குக்கான 3000மீ தடைதாண்டும் போட்டியில் 9:22.74 நேரத்தில் இலக்கை அடைந்து 10வது இடத்தை பிடித்தார்.

6. உலகின் மிகப் பெரிய உள்ளரங்க தீம் பார்க் பின்வரும் எந்த நகரத்தில் திறக்கப்படவுள்ளது ?

A.துபாய்
B.நியூயார்க்
C.பாரிஸ்
D.பெர்லின்

விடை: A.துபாய்

உலகின் மிகப் பெரிய உள்ளரங்க தீம் பார்க் துபாய், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE)-ல் திறக்கப்பட உள்ளது. கோடை காலத்தில் மிகுந்த வெப்பமான பாலைவனங்களை பார்க்க வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் இந்த தீம் பார்க் அமைக்கப்பட்டுள்ளது.

7. பேரிடர் அபாய குறைப்பு (DRR) குறித்து, ஆசியாவின் முதல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (எஸ் அண்ட் டி) எந்த நாட்டில் நடைபெற்றது ?

A.தாய்லாந்து
B.சிங்கப்பூர்
C.மலேஷியா
D.இந்தியா

விடை : A.தாய்லாந்து

ஆகஸ்ட் 23-24, 2016-இல் பேரிடர் அபாய குறைப்பு (DRR) பற்றி தாய்லாந்தின் பாங்காக்கில் முதல் ஆசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (எஸ் அண்ட் டி) மாநாடு நடைபெற்றது. இதில் ,முக்கிய பிரச்சினைகள், சவால்கள், அறிவியல் கொள்கை உருவாக்கத்தின் தேவை மற்றும் அதிலுள்ள வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப் பட்டது. இந்தியாவின் உள்நாட்டலுவல் அமைச்சர் கிரண் ரிஜிஜூ ஒரு சில நடைமுறைகளை பகிர்ந்து , உரையாற்றினார் . ஆசிய மண்டலத்திற்கான ஐ.நா-வால் நியமிக்கப்பட்ட DRR தலைவர் இவர்.

8. முதல் பிரிக்ஸ் திரைப்பட விழா பின்வரும் எந்த நாடு நடத்துகிறது ?

A.இந்தியா
B.பிரேசில்
C.சீனா
D.ரஷ்யா

விடை : A.இந்தியா

செப்டம்பர் 2 முதல் 6 வரை புது தில்லியில் உள்ள சிரிபோர்ட் வளாகக்கூடத்தில், முதல் பிரிக்ஸ் திரைப்பட விழா நடைபெறும். இந்த திரைப்பட விழா, உறுப்பு நாடுகளில் உள்ள திரைப்படத்துறை மக்கள் ஒன்றிணைய மற்றும் சினிமா,கலாச்சாரம் போன்றவற்றில் ஒத்துழைப்பை வழங்க ஒரு களமாக இருக்கும் என கூறப்படுகிறது.மேலும் நடிகர்கள் , தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குனர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும்விதமாக விருதுகளும் வழங்கப்படுள்ளது .

9. "ஜனநாயகத்தின் அரங்கம் " என்ற நூலின் ஆசிரியர் யார் ?

A.கே.சச்சித்தாந்தன்
B.ரொமிலா தாபர்
C.அமிதாவ் கோஷ்
D.சிவ விஸ்வநாதன்

விடை : D.சிவ விஸ்வநாதன்

“ஜனநாயகத்தின் அரங்கம்: காவியத்திற்கும் அன்றாட நாளுக்கும் இடையே - தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள்" இது சமகால இந்தியாவின் விஞ்ஞானம் மற்றும் மதம், அரசியல் மற்றும் சமூகம், கிரிக்கெட் மற்றும் படம் குறித்து ஒரு கண்கவர் நுண்ணறிவை வழங்குகிறது.

10. பார்வையற்றோர் மற்றும் அச்சு எழுத்துகளை படிக்க இயலாதவர்களுக்கு (Divyang) மத்திய அரசால் அறிமுக படுத்தப்பட்ட இ -நூலகத்தின் பெயர் என்ன ?

A.இ -புஸ்தகாலயா
B.திவ்யா புஸ்தகாலயா
C.சுகம்யா புஸ்தகாலயா
D.நிர்விரோத் புஸ்தகாலயா

விடை : C.சுகம்யா புஸ்தகாலயா

பிரதமரின் 'சுகம்யா பாரத் அபியான்' திட்டத்தின் கீழ், பார்வைக் கோளாறு மற்றும் அச்சுப் குறைபாடு உள்ள மக்கள் படிக்க வசதியாக "சுகம்யா புஸ்தகாலயா" எனப்படும் ஆன்லைன் நூலகத்தினை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. அனைத்து விதமான பாடங்களுடன், பல்வேறு மொழிகளில் சுமார் 2 லட்சம் புத்தகங்களை இதில் காணலாம். இதனை தேசிய ஊனமுற்றோர் நிறுவனம் மற்றும் இந்தியா புக் ஷேர் என்ற டெய்சி கருத்துக்கள உறுப்பினர் அமைப்புக்கள் இணைந்து உருவாக்கி உள்ளனர்.

நடப்பு நிகழ்வுகள் -ஆகஸ்ட் 23, 2016

1. இந்தியா தபால் கொடுப்பனவு வங்கிகள் (IPPB) குழுவின் புதிய சுதந்திரமான இயக்குனர் யார் ?

A.எம் எல் லோதா
B.ஆர் எஸ் சோதி
C.ஜி எஸ் பாட்டி
D.பி கே குமார்

விடை : B.ஆர் எஸ் சோதி

ஆர் எஸ் சோதி 'அமுல்' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், இந்திய தபால் கொடுப்பனவு வங்கிகள் (IPPB) குழுவின் புதிய சுதந்திரமான இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவால் நியமிக்கப்பட்ட 5 சுதந்திரமான உறுப்பினர்களுள் இவரும் ஒருவர்.இதன் சேவை மார்ச் 2017 முதல் துவங்கப்பட உள்ளது. இவ்வங்கியானது , மொபைல் நிறுவனங்கள், அங்காடிகள், தனிநபர்கள் மற்றும் சிறு தொழில்கள் போன்றவற்றின் வங்கி தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு தனிப்பட்ட வங்கியாக அமைக்கப்பட்டு பின்வரும் சேவைகளை வழங்க உள்ளது, பணம் செலுத்துதல் , பணம் அனுப்புதல் , இணைய வங்கி போன்றவற்றுடன் மேலும் சில சேவைகளையும் வழங்க திட்டமிட்டுள்ளது .

2. "ஒரு இந்திய பெண்" என்ற நாவலின் ஆசிரியர் யார் ?

A.கிரண் தேசாய்
B.ஜும்பா லஹிரி
C.சேதன் பகத்
D.அமிதாவ் கோஷ்

விடை : C.சேதன் பகத்

"ஒரு இந்திய பெண்" என்ற நாவல் சேதன் பகத்தால் எழுதப்பட்டு வருகிறது. இவரின் இந்த புதிய நாவலானது, அறிவார்ந்த மற்றும் வெற்றிகரமான ஒரு இந்திய பெண், அன்பை பெற எவ்வளவு கஷ்டப்படுகிறாள் என்பது குறித்தது.

3. 2016 ரியோ ஒலிம்பிக் நிறைவு விழாவில் இந்தியாவின் சார்பில், இந்திய தேசியக்கொடியை தாங்கி சென்றவர் யார்?

A.பி வி சிந்து
B.லலிதா பாபர்
C.சாக்சி மாலிக்
D.லியாண்டர் பயஸ்

விடை : C.சாக்சி மாலிக்

ஃப்ரீஸ்டைல் மல்யுத்த வீரர் சாக்ஷி மாலிக், ஆகஸ்ட் 21, 2016 ரியோ ஒலிம்பிக் நிறைவு விழாவில் இந்தியாவின் சார்பில், இந்திய தேசியக்கொடியை தாங்கி சென்றார். இவர் 58கிலோ பிரிவில் வெண்கலம் பெற்றுத் தந்தார். ரியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் முதல் பதக்கம் வென்று ஒலிம்பிக் பதக்கம் வென்ற முதல் இந்திய பெண் மல்யுத்த வீரர் வரலாறும் படைத்தார்.

4. இந்தியாவின் எந்த மாநிலம் முதன்முதலாக, உள்நாட்டு பாதுகாப்பு சட்டத்திற்கான சட்ட வரைவை உருவாக்கியுள்ளது ?

A.தமிழ்நாடு
B.மகாராஷ்டிரா
C.ஒடிசா
D.கேரளா

விடை : B.மகாராஷ்டிரா

உள்நாட்டு பாதுகாப்பிற்காக, "2016 மகாராஷ்டிரா பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு சட்டம் (MPISA)" என்ற சட்ட வரைவினை உருவாக்கியுள்ள முதல் இந்திய மாநிலமாக மகாராஷ்டிரா திகழ்கிறது.
இந்த வரைவு, அதன் எல்லைக்குள் ஏற்படும் அச்சுறுத்தல், கிளர்ச்சி, பயங்கரவாதம், வன்முறை, பகைமையை ஏற்படுத்தும் குழுக்கள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களை தாக்கும் அந்நிய சக்திகள், குடிமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் போன்றவற்றை கலைய அமைக்கப்பட்டுள்ளது.

5. பஞ்சாப்பின் புதிய ஆளுநராக பொறுப்பேற்றுள்ளவர் யார் ?

A.நஜ்மா ஹெப்துல்லா
B.வி.பி.சிங் பதோனர்
C.ஜெகதீஷ் முகி
D.கப்தான் சிங் சோலங்கி

விடை : B.வி.பி.சிங் பதோனர்

வி.பி.சிங் பதோனர், பஞ்சாப்பின் புதிய ஆளுநராக பொறுப்பேற்றுள்ளார். மேலும் இவர் சண்டிகரின் நிர்வாகியாகவும் பொறுப்பேற்றார். பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஜே. வஜீப்தார் பஞ்சாப் ராஜ்பவனில் இவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். இவருக்கு முன் இப்பணியை ஹரியானா ஆளுநர் கப்டன் சிங் சோலங்கி ஜனவரி 2015 முதல் நிர்வகித்து வருகிறார்.

6.2016 உலகக் கோப்பை கபடி இந்தியாவின் எந்த மாநிலத்தில் நடைபெற உள்ளது ?

A.ராஜஸ்தான்
B.ஹரியானா
C.ஒடிசா
D.குஜராத்

விடை : D.குஜராத்

2016 உலகக் கோப்பை கபடி குஜராத்தில் உள்ள அகமதாபாத்தில் அக்டோபர் 7-22 வரை நடைபெற உள்ளது. இதில் உலகெங்கும் உள்ள நாடுகளில் இருந்து 12 அணிகள் கலந்து கொள்ள உள்ளன. அவையாவன : இந்தியா, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஈரான், போலந்து, பாகிஸ்தான், வங்காளம், கொரியா, ஜப்பான் மற்றும் கென்யா. 2016 உலகக் கோப்பை கபடி போட்டியின் அதிகாரப்பூர்வ ஒளிபரப்பு உரிமையை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் பெற்றுள்ளது. இப்போட்டிகள் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நெட்வொர்க் மற்றும் Hotstar-ல் பிரத்தியேகமாக ஒளிபரப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

7. பின்வரும் யாருக்கு 2016 ராஜீவ் காந்தி கேல் ரத்னா பட்டம் வழங்கப்படவுள்ளது ?

A.பி.வி.சிந்து
B.ஜித்து ராய்
C.தீபா கர்மாகர்
D.மேலே உள்ள அனைத்தும்

விடை : D.மேலே உள்ள அனைத்தும்

2016 ராஜீவ் காந்தி கேல் ரத்னா பின்வரும் 4 வீரர்களுக்கு வழங்கப்படவுள்ளது.
ஒலிம்பிக் பதக்கம் வென்ற பி .வி.சிந்து, சாக்ஷி மாலிக், ஜிம்னாஸ்டிக் வீராங்கனை தீபா கர்மாகர் மற்றும் துப்பாக்கி சுடும் வீரர் ஜீத்து ராய். இந்தியாவின் மிக உயர்ந்த விளையாட்டு விருது 4 வீரர்களுக்கு அளிப்பது இதுவே முதன் முறையாகும். விருதுகள் , ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மூலம் ஆகஸ்ட் 29,2016 அன்று வழங்கப்பட உள்ளது

8. 2016 துரோணாச்சார்யா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பிஷ்வேஷ்வர் நந்தி, எந்த விளையாட்டுகளுடன் தொடர்புடையவர் ?

A.கிரிக்கெட்
B.ஜிம்னாஸ்டிக்ஸ்
C.ஹாக்கி
D.குத்துச்சண்டை

விடை : B.ஜிம்னாஸ்டிக்ஸ்

2016 துரோணாச்சார்யா விருது 6 பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.
1. பிஷ்வேஷ்வர் நந்தி, தீபா கர்மாகர் பயிற்சியாளர்,
2. ராஜ் குமார் சர்மா (கிரிக்கெட்),விராத் கோஹ்லி அறிவுரையாளர்
3. நாக்புரி ரமேஷ் (தடகளம்)
4. சாகர்மால் தயாள் (குத்துச்சண்டை)
5. எஸ் பிரதீப்குமார் (நீச்சல்)
6. மஹபிர் சிங் (மல்யுத்தம்) .
இது தவிர, 15 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜுனா விருது மற்றும் 3 பேருக்கு தயான் சந்த் விருதுகளும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மூலம் ஆகஸ்ட் 29,2016-ல் விநியோகிக்கப்பட இருக்கிறது.
ஆகஸ்ட் 29 - தேசிய விளையாட்டு தினம் (தயான் சந்த் பிறந்த நாள்)

9. ஓ.பி. ஜெய்ஷா எந்த விளையாட்டுகளுடன் தொடர்புடையவர் ?

A.குத்துச்சண்டை
B.படகுப்போட்டி
C.தடகளம்
D.நீச்சல்

விடை : C.தடகளம்

ஓ பி ஜெய்ஷா, கேரளாவை பூர்வீகமாக கொண்ட இந்திய தட கள வீரர். இந்திய அதிகாரிகள், 2016 ரியோ ஒலிம்பிக்கில் தண்ணீர் மற்றும் ஆற்றல்பானங்கள் ஏற்பாடு செய்யவில்லை என சமீபத்தில் குற்றச்சாட்டைவைத்தார். இந்த குற்றசாட்டு குறித்து விசாரிக்க, மத்திய விளையாட்டு அமைச்சகம் 2 பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது.இகுழுவில், ஓங்கர் கேடியா [இணைச் செயலர் (விளையாட்டு)], விவேக் நாராயண் [இயக்குனர், விளையாட்டு] ஆகிய இருவர் உள்ளனர். இக்குழு 7 நாட்களில் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என் கூறப்பட்டுள்ளது.

10. இந்திய ரயில்வே துறை, பாரம்பரிய பொருள்களை டிஜிட்டல்மயமாக்கி வெளியிட , பின்வரும் எந்த தொழில்நுட்ப நிறுவனத்துடன் கூட்டுசேர்ந்துள்ளது ?

A.சினப்டீல்
B.பிளிப்கார்ட்
C.மைக்ரோசாப்ட்
D.கூகிள்

விடை : D.கூகிள்

இந்திய ரயில்வே துறை, அதன் பாரம்பரிய பொருள்களை டிஜிட்டல்மயமாக்கி அதன் தளங்களில் வெளியிட கூகிளின் உதவியை நாடியுள்ளது. இது தவிர, டிஜிட்டல் களஞ்சியங்களை உலகளாவியா அளவில் ஆன்லைனில் அணுகும் முறையையும் இலவசமாக உருவாக்க இந்திய ரயில்வேவிற்கு கூகுள் உதவும்.
இது பற்றிய உடன்பாடு தேசிய ரயில் அருங்காட்சியகம் மற்றும் Google கலாச்சார நிலையம் (GCI) இடையே கையெழுத்திடப்பட்டது . GCI என்பது உலக கலாச்சார பாரம்பரியத்தை ஆன்லைனில் கொண்டு வர முயற்சிக்கும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பு ஆகும். தற்போது, கூகிள் 100 நிலையங்களில் இலவச Wi-Fi சேவை வழங்குவதில் ரயில்வே துறைக்கு உதவி வருகிறது.

நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 21,22 - 2016

1. பிரெஞ்சு நாட்டின் மரியாதைக்குரிய விருதான செவாலியர் விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய ஆளுமை யார் ?

A . நசிருதீன் ஷா
B . கமல்ஹாசன்
C. சுமித்ரா கோஷ்
D. அமிதாப் பச்சன்

விடை : B.கமல்ஹாசன்

கமல், நன்கு அறியப்பட்ட தமிழ் திரைப்பட நடிகர், பிரெஞ்சு அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான "செவாலியர் டி எல்'ஒர்டரே கலை மற்றும் எட் லெட்டர்ஸ்" (அல்லது The Knight of the Order of Arts and Letters) -க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது பிரான்ஸ் பிரதமர் விருதின் ஒரு பகுதியாக உள்ளது. நடிகர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு பிறகு இவ்விருதினை பெறும் 2-வது தமிழ் நடிகர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது

2. ஹோமிபாபா தேசிய நிறுவனத்தின்(HBNI) புதிய துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?

A . மது கோஷ்
B . நிஷாந்த் ஜெயின்
C . P D குப்தா
D . சுமன் கோஷ்

விடை : C. P D குப்தா

புகழ்பெற்ற விஞ்ஞானியான இவர், 5 ஆண்டுகளுக்கு மும்பை அடிப்படையிலான ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் புதிய துணைவேந்தராக (HBNI) நியமிக்கப்பட்டுள்ளார். HBNI அணுசக்தித் துறை ஒரு உதவி பெறும் நிறுவனம் ஆகும் மற்றும் ஒரு யுஜிசி சட்டத்தின் கீழ் பல்கலைக்கழகம் என்று கருதப்படும். இந்நிறுவனம் உள்நாட்டு அணுசக்தி தொழில்நுட்ப திறன் முன்னேற்றத்தினை முக்கியத்துவத்தில் கொண்டு அறிவியல் (பொறியியல் அறிவியல் உட்பட) மற்றும் கணிதத்தில் சிறந்து விளங்க ,ஊக்குவிக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

3. 2016 பிரிக்ஸ் பேரிடர் மேலாண்மை கருத்தரங்கம் இந்தியாவின் எந்த நகரத்தில் சமீபத்தில் துவங்கியுள்ளது ?

A.புது டெல்லி
B.போபால்
C.ராய்ப்பூர்

D.உதய்பூர்

விடை : D.உதய்பூர் .

பிரிக்ஸ் பேரிடர் மேலாண்மையின் 2வது பதிப்பான இம்மாநாடு ராஜஸ்தானில் உள்ள உதய்பூரில் ஆகஸ்ட் 22-ல் துவங்கியது. இம்மாநாடு , இதன் இரண்டு குறிக்கோள்களான "வெள்ளம் இடர்ப்பாடு மேலாண்மை" மற்றும் "காலநிலை மாறுதலால் ஏற்படும் நிகழ்வுகள் குறித்த தொலைநோக்கு" ஆகியவற்றில் கவனம் செலுத்தவுள்ளது. இந்த 2-நாள் மாநாட்டின் நோக்கமானது, உறுப்பு நாடுகள் அவரவர் பயன்படுத்தும் 'காலநிலை கணிப்பு' முறைகளை பகிர்வதும் , வெள்ள இடர் மேலாண்மை குறித்த அனுபவங்களை பகிர்வதும், தேவை ஏற்படின் உறுப்பு நாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே ஆகும்.

4. குற்றங்களை கட்டுப்படுத்த டிஎன்ஏ குறியீட்டு முறையை (DIS) எந்த மாநில காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது ?

A.ஒடிஷா
B.ஆந்திரப்பிரதேசம்
C.ஹரியானா
D.பஞ்சாப்

விடை : B.ஆந்திரப்பிரதேசம்.

சமீபத்தில் ஆந்திரப் பிரதேச போலீஸ் டிஎன்ஏ குறியீட்டு அமைப்பின் (DIS) மூலம் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் புது யுத்தியை அறிமுகம் செய்துள்ளது . இதன் முதற்கட்டமாக , எச்சில் மற்றும் இரத்தகறையின் மூலம் 90-120 நிமிடங்களில் குற்றவாளியின் DNA மாதிரியை பெற முடியும் . இத்தகைய DNA குறிப்புகளை கொண்டு குற்றவாளியை நெருங்க முடியும் மேலும் அவர் தொடர்புடைய வழக்குகளை ஆராய முடியும். அத்துடன் மட்டுமல்லாமால் , சந்தேக நபர்கள் தாங்கள் குற்றமற்றவர் என்றும் நிரூபிக்க இயலும் . இந்த அமைப்பு ,சமீபத்திய DNA தொழில்நுட்ப கருவிகளால் (RapidHIT டிஎன்ஏ அமைப்பு என அழைக்கப்படும்) அமெரிக்காவின் IntegenX என்ற நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

5. ASSOCHAM-ன் சமீபத்திய அறிக்கையின் படி, தொழில்நுட்ப உந்துதலினால் துவங்கப்படும் நிறுவனங்கள் (ஸ்டார்ட்-அப்ஸ்) தரவரிசையில் இந்தியாவின் இடம் யாது ?

A.4
B.3
C.2

D.5

விடை : B.3வது .

ASSOCHAM மற்றும் Thought Arbitrage Research Institute இணைந்து வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியா மூன்றாவது இடத்தில உள்ளது. முதல் இரண்டு இடங்களை முறையே USA மற்றும் UK பெற்றுள்ளது . ஆய்வுகளின்படி, இந்தியாவில் தொழில்நிறுவனங்களை துவங்க ஏற்ற இடமாக பெங்களூரு உள்ளது. இதற்கடுத்து டெல்லி NCR , மும்பை உள்ளன. 'துவங்கு இந்தியா ', 'இந்தியாவில் உருவாக்கு', 'டிஜிட்டல் இந்தியா ' போன்ற திட்டங்கள் புதிதாக தொழில் துவங்கவுள்ளவர்களுக்கு ஒரு நல்ல சூழலை ஏற்படுத்தும் என கணிக்கப்படுகிறது .

6.பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (பிஎஸ்என்எல்), தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தீர்வுகளுக்காக பின்வரும் எந்த தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU) செய்துள்ளது ?

A.விப்ரோ
B.இன்போஸிஸ்
C.கூகிள்
D.மைக்ரோசாப்ட்

விடை : D.மைக்ரோசாப்ட் .

பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (பிஎஸ்என்எல்) சமீபத்தில் பெருவணிகங்களின் தேவைகளை சந்திக்கும் பொருட்டு, தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தீர்வுகளை வழங்க மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது வருகிறது. இதன் மூலம், அரசு நிறுவனங்கள் உட்பட பிஎஸ்என்எல்லின் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு ஆடியோ மற்றும் வீடியோ தேவைகளை மைக்ரோசாப்ட் வழங்கும்.

7. உலக கொசு தினம் எப்போது அனுசரிக்கப்படுகிறது ?

A.ஆகஸ்ட் 21
Bஆகஸ்ட் 22
C.ஆகஸ்ட் 20
D.ஆகஸ்ட் 23

விடை: C.ஆகஸ்ட் 20.

மலேரியா குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20-ம் நாள் கொசு தினம் அனுசரிக்கப்படுகிறது.மேலும் அதை எவ்வாறு தடுப்பது மற்றும்

அதனை குணப்படுத்தும் ஆராய்ச்சிக்கான நிதியை உயர்தல் போன்றவை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் . 1897-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20-ம் நாள் ,பிரிட்டிஷ் மருத்துவர் ஐயா ரொனால்ட் ராஸ் என்பவர்,அனாஃபிலிஸ் எனப்படும் பெண் கொசுக்கள்தான் மனிதர்களுக்கு மலேரியாவை பரப்புகிறது என் கண்டறிந்தார். இதுவே இந்நோய் பற்றி அறிந்து கொள்ள அஸ்திவாரமாக அமைந்தது.

8. சமீபத்தில் காலமான சுப்ரதா பானர்ஜி என்பவர் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?

A.கிரிக்கெட்
B.இறகுப் பந்து
C.குத்துச்சண்டை
D.கால்பந்து

விடை : A.கிரிக்கெட் .

சுப்ரதா பானர்ஜி (71), முன்னாள் சர்வதேச நடுவர், சமீபத்தில் கொல்கத்தாவில் உள்ள மேற்கு வங்காளத்தில் காலமானார். அவருடைய சர்வதேச விளையாட்டு வாழ்க்கை 15 ஆண்டுகள் நீடித்தது .1998 மே மாதம், குவாலியறில் நடைபெற்ற ,இந்தியா -கென்யா போட்டியே அவரது இறுதி சர்வதேச போட்டி.அவர் பிசிசிஐ-ன் நடுவர் பயிற்சியாளர் மேலும் இவர் ஒரு நடுவர் கல்வியாளர் ஆவார் .

9. ஒலிம்பிக் ஆணை விருது சமீபத்தில் யாருக்கு அளிக்கப்பட்டது ?

A.ஜோசிம் லோ
B.கரோலினா மாரின்
C.தாமஸ் பாக்
D. N ராமச்சந்திரன்

விடை : D. N ராமச்சந்திரன்.

N ராமச்சந்திரன், இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் (பதவியிலிருந்தும்), அவரது அளப்பரிய சேவைகளை பாராட்டி ஒலிம்பிக் இயக்கம் அவருக்கு "ஒலிம்பிக் ஆணை விருதை" வழங்கியுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் (ஐஓசி) தாமஸ் பாக் மூலம் இவ்விருது வழங்கப்பட்டது. இது ஒலிம்பிக் வரிசையில் ஒலிம்பிக் இயக்கத்தின் மிக உயர்ந்த விருது மற்றும் குறிப்பாக ஒலிம்பிக் இயக்கத்திற்கு சிறந்த பங்களிப்பை அளிப்பவருக்கு மட்டும் கிடைக்கக்கூடிய விருது.

10. "தேர்வு நாள்" (Selcection Day) என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?

A.மோகன் குமார்
B.நீதா மேனன்
C.கேசவ குஹா
D.அரவிந்த் அடிகா

விடை :D. அரவிந்த் அடிகா.

அரவிந்த் அடிகா, மேன் புக்கர் பரிசு பெற்ற ஒரு எழுத்தாளர்(The White Tiger). கிரிக்கெட் நட்சத்திரங்கள் ஆக தங்கள் தந்தையால் துன்புறுத்தி எழுப்பப்படும் இரண்டு மும்பை சகோதரர்கள் மற்றும் அவ்வயதில் வரும் உறவு மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்கள் பற்றி ஒரு திகைப்பூட்டும் புதிய நாவல். தனிப்பட்ட இன்னிங்ஸ் கணக்குகளுடன் மதிநுட்பமான தீர்ப்புகள் இணைந்த, விளையாட்டு பற்றி எழுதப்பட்ட மிகச் சிறந்த நாவல்களில் ஒன்று.

நடப்பு நிகழ்வுகள்: 18,19 - Aug - 2016

1. 2016 ரியோ ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் யார் ?

A. PV சிந்து
B. பாபிதா குமாரி
C. சாக்ஷி மாலிக்
D. கீதா போகத்

2. "ஏர்லேண்டர் 10" என்ற உலகின் மிகப்பெரிய வானூர்தி விமானம் தன்னுடைய முதல் விமான சேவையை துவங்கியுள்ளது. இது எந்த நாட்டின் தயாரிப்பு ?

A. USA
B. UK
C. பிரான்சு
D. ஜப்பான்

3. மின்சார பரிமாற்றம் தொடர்பான திட்டங்களின் செயல்பாட்டை கண்காணிக்க மத்திய அரசால் அறிமுகப் படுத்தப்பட்ட செல்லிட செயலியின்

(Mobile App) பெயர் என்ன ?

A. மிலன் (Milan)
B. தராங் (Tarang)
C. சத்ராங் (Satrang)
D. அஷ்யுரன்ஷ் (Assurance)

4. சமீபத்தில் மறைந்த கோபிந்த் தேஜ் என்பவர் எந்த துறையுடன் தொடர்புடையவர் ?

A. திரைப்படத்துறை
B. புகைப்படம்
C. ஓவியம்
D. விளையாட்டு

5.பின்வரும் எந்த நாடு, 2016-ல் 3வது உலக ட்ரவ்மா (Trauma) மாநாட்டினை நடத்தியது ?

A. இந்தியா
B. பிரேசில்
C. ஜெர்மனி
D. பிரான்சு

6. பெட்ரோலிய பொருள்களை எடுத்துச் செல்ல, பின்வரும் எந்த் அண்டை நாட்டுடன் இந்திய அரசு குறுகிய கால ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது ?

A. மியான்மர்
B. பூடான்
C. வங்காளதேசம்
D. இலங்கை

7. 2016 மலை எதிரொலி இலக்கிய விழா பின்வரும் எந்த நகரத்தில் நடைபெற உள்ளது ?

A. சிம்லா
B. திம்பு
C. காத்மண்ட்
D. டேராடூன்

8. "சொற்களின் ஆதரவற்றோர்" என்ற நூலின் ஆசிரியர் யார் ?

A. அமிதாவ் கோஷ்
B. ஷினி ஆண்டனி
C. சேதன் பகத்
D. அந்தார தேவ் சென்

9. மத்திய அரசின் எந்த அமைச்சரவை, கனிம சுரங்கங்களுக்கு நட்சத்திரக்குறியிட்டு மதிப்பீடு செய்ய புதிய இணைய தளத்தினை தொடங்கியுள்ளது ?

A. பணியாளர் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய துறை
B. ஐவுளித்துறை
C. கனிம வளத்துறை
D. பணியாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை

10. உலகின் நீளமான மற்றும் உயரமான கண்ணாடி அடிப்பாகமுடைய பாலம் எங்குள்ளது ?

A. USA
B. UK
C. சீனா
D. பிரான்சு

01) மாநில அரசின் 243 சேவைகளை ஒரே இடத்தில் பெறுவதற்கு ஏதுவாக Seva Kendra மையங்களை துவக்கியுள்ள மாநில அரசு எது ?

02) நாடு முழுவதும் 12ம் வகுப்பு கணிதம் , அறிவியல் பாடங்களுக்கு ஒரே பாடத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என கூறிய கமிட்டி எது ?

03) பதான்கோட் விமானப்படை தாக்குதலில், தீவிரவாதிகளுக்கு எதிராக சண்டையிட்டு வீரமரணம் எய்திய NSG வீரர் Lt.Col. E.K. நிரஞ்சனை

கவுரவிக்கும் விதமாக எந்த விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது?

04) தீபா கர்மகர் ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் போட்டியின் எந்த பிரிவில் நான்காம் இடம் பிடித்தார்?

05) பெட்ரோலியத்துறை சார்ந்த start up நிறுவனங்களில் முதலீடு செய்ய ONGC நிறுவனம் எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்துள்ளது?

06) 2000 CCக்கு மேற்பட்ட டீசல் கார்களை டெல்லியில் விற்பனை செய்ய சூழல் பாதுகாப்பு வரி எத்தனை சதவிகிதம் செலுத்தவேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது?

07) ஆகஸ்ட் 15 / 2016 முடிய திறந்தவெளி கழிப்பிடம் இல்லா நகரங்கள் எத்தனை உருவாகியுள்ளதாக, அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்?

08) சில நாட்களுக்கு முன் மரணமடைந்த முன்னாள் FIFA தலைவர் யார் ? அவரது பதவிக்காலத்தில் எத்தனை முறை உலக கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெற்றுள்ளது?

09) ஆகஸ்ட் 16 & 17ல் பாகிஸ்தானில் நடைபெற்ற சார்க் நாடுகளின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் யார் தலைமையில் கலந்துகொண்டுள்ளனர்?

10) உலக கொசு தினம் ?

விடைகள்

.

01) பஞ்சாப்

02) தெலுங்கானா மாநில மேல்நிலைக்கல்வி வாரிய செயலாளர் அசோக்

03) சௌரிய சக்ரா விருது

04) தனிநபர் வால்ட் (Individual Vault)

05) 100 கோடி

06) 1%

07) 122 நகரங்கள் .... (இந்த நிதியாண்டுக்குள் 739ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது)

08) Joao Havelange .., (BRAZIL) 6 WORLD CUP MATCHES

09) கைலாஷ் நாராயண் சிங் தியோ M.P

10) ஆகஸ்ட் 20